தேதி.24.06.2025

**<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>**

**O.S.No.** 89/2016 திரு. விஜயகுமார், த/பெ.காளியப்பன் வா.சா.3

**<u>வா.சா.3: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் வாதிக்கு உறவினரா அல்லது நண்பரா என்றால் நண்பர். என் நண்பரின் பெயர் சுகுமார். நான் வாதிகளின் வீட்டின் அருகாமையில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். எந்த ஆவணங்களின் அடிப்படையில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எங்கு குடியிருக்கிறார்கள் என்றால் ரங்கசமுத்திரம் பகுதியில் குடியிருந்து வருகிறார்கள். ராஜம்மாள் என்பவரைத் தெரியுமா என்றால் தெரியும். ராஜம்மாளின் அம்மா, அப்பா பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. ராஜம்மாளுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் யாரும் இல்லை. வழக்கு சொத்துக்கள் ராஜம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ராஜம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் 27.08.1996ம் தேதியில் 4ம் பிரதிவாதி ஜவகர், 6ம் பிரதிவாதி அமுதவேணி ஆகிய இரண்டு பேர்களுக்கும் உயில் எழுதிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதை பற்றி பிரமாண பத்திரத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். 27.08.1996ம் தேதியில் 4ம் பிரதிவாதி ஜவகருக்கும், 6ம் பிரதிவாதி அமுதவேணிக்கும் உயில் எழுதியுள்ள எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அமுதவேணியின் சொத்தை பார்த்துக்கொள்ள பாதுகாவலராக இருக்க எழுதப்பட்டுள்ளது என்று தெரியும் ஆனால் உயில் எழுதியது பற்றி தெரியாது. உயில் பற்றிய வாசகங்கள் பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 27.08.1996ம் தேதிய

உயிலின் அடிப்படையில் ஜவகர் பல உரிமை மாற்றங்கள் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. யார் யாருக்கு உரிமை மாற்றம் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எப்போது எங்கு வந்து எந்த தேதியில் 4ம் பிரதிவாதி ஜகவரிடம் பாகம் பிரித்து கொடுக்க சொன்னார்கள் என்ற விவரம் நேரில் தெரியுமா என்றால் தெரியாது. இதற்கு முன்னால் வாதிகளுக்கும் பிரதிவாதிக்கும் வேறு வழக்குகள் நடந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண பத்திரிக்கையை யார் தயார் செய்தார் என்றால் நான் சொல்ல சொல்ல வழக்கறிஞர் தயார் செய்தது. நான் சொல்லி பிரமாண பத்திரிக்கை தயார் செய்யவில்லை என்றும், அதற்கு மாறாகத்தான் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் பெற உரிமையற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல. லட்சமியின் கணவர் சுகுமார் என்பவர் எனக்கு நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.